2022 ஏப்ரல் 8] [திரு. மா. சுப்பிரமணியன்]

நேரத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் வருகிறதென்றவுடன், உடனடியாக அழைத்துச் சொன்னது, அவர்கள் இங்கே படிப்பதற்கு ஒன்றிய அரசு அனுமதித்தாலும் சரி அல்லது அவர்கள் syllabus–ஐ ஒத்த வேறு நாடுகளுக்குச் சென்று அவர்களைப் படிக்க வைப்பதற்கான நிலையை ஒன்றிய அரசு எடுத்தாலும் சரி, இந்த மாணவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் தமிழக அரசு செய்யும் என்கின்ற உத்தரவாதத்தை அளிக்கச் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்த உத்தரவாதத்தை அளித்து, அந்த மாணவர்களின் எதிர்கால நலனை இந்த அரசு காக்கும் என்பதைத் தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு . . . (குறுக்கீடு)

3. தகவல் கோரல்

ஆலங்குளம் தொகுதி, பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் சிலை, சாலை விரிவாக்கத்தால் அகற்றப்படவுள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.

திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான ஆலங்குளம் தொகுதியின் மையப் பகுதியில் அமைந்திருக்கின்ற கர்ம வீரர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய சிலை, சாலை விரிவாக்கத்தால் அகற்றப்படுவதாக செய்திகள் வந்து, அதன் அடிப்படையில் அங்கே பரபரப்பு ஏற்பட்டிருக்கின்றது. பெருந்தலைவர் காமராஜருடைய சிலை அங்கு 40 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்டதைத் தாங்களும் அறிவீர்கள், அனைவரும் அங்கு சென்று அந்தத் தலத்தை புனிதத் தலமாக வணங்குவோம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், பேசியது போதும்.

திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சிலையைப் பாதுகாப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைக் கேட்டு அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி–தென்காசி சாலை 29.4 கி.மீ. நீளத்திற்கு நான்குவழிச் சாலையாக மேம்பாடு செய்ய தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, செயலாக்கப்பட்டு வருகிறது. இச்சாலையில் கி.மீ. 3.60 என்பது ஆலங்குளம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியாகும். சாலையின் வலதுபுறத்தில், சாலையின் விளிம்பிலிருந்து சுமார் 6.5 மீட்டர் தூரத்தில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடத்தில் பெருந்தலைவர் காமராஜர் சிலை உள்ளது. இச்சாலையினை நான்குவழிச் சாலையாக அகலப்படுத்தும்பொழுது, சிலையினை இடம் மாற்றி வைப்பதன் அவசியம் கருதி, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுத் திட்டத்தின்மூலம் இழப்பீடாக 1,35,526 ரூபாய், வருவாய் அலுவலர் திரு. எஸ். அருமைநாயகம் அவர்களிடத்தில் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, இன்றைய சூழ்நிலையில், உச்ச நீதிமன்றம் 18–1–2011 அன்று வழங்கிய தீர்ப்பில்,* Petition for Special Leave to Appeal (Civil) No. *8519/2006–ல் மாநில அரசின் பொது சாலைகள், நடைபாதைகள், பொதுமக்கள் பயன்பாட்டிலுள்ள இடங்கள் மற்றும் அனைத்து சாலைகளிலும் சிலை வைக்க அனுமதி வழங்கக்கூடாதென்று தெரிவித்திருக்கிறது. இது தொடர்பாக வருவாய் நிருவாக ஆணையாளர் அவர்கள், 26–3–2019 அன்று அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் அரசு மற்றும் தனியார் சார்பில் சிலைகள் அமைப்பதற்கு அனுமதி வழங்குவது குறித்து சில ஆணைகளைப் பிறப்பித்திருக்கிறார்கள்.*

முற்பகல் 11–50

வருவாய்த் துறை, காவல் துறை, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மூலமாகத் தடையில்லா சான்று பெற்று, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகப் பரிந்துரை செய்து அனுப்பப்படும் முன்மொழிவுகளுக்கு அரசு அனுமதி வழங்கலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அந்த அடிப்படையிலே, இது சம்பந்தமாக இடம் ஒதுக்குவது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கலந்துபேசி, இதற்கு நல்லதொரு முடிவு எடுக்கப்படும் என்று அரசின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.